# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24466 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. கே. எஸ். ராஜா,<br>த/பெ. எஸ். சுப்பராவ்,<br>18/A, ஆர்.வி. நகர், மேற்கு 1–வது பிரிவு,<br>திருநாகேஸ்வரம் – 612 204,<br>குடந்தை வட்டம்,<br>தஞ்சை மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர்,<br>நில நிர்வாக ஆணையரகம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005. |

--------

மனுதாரர் திரு. கே. எஸ். ராஜா மற்றும் திரு. என். குப்புரத்தினம், பொதுத் தகவல் அலுவலர் / உதவி ஆணையர் (1) , நில நிர்வாக ஆணையரகம், சென்னை இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 07.03.09 அன்று 8 இனங்களில் குறிப்பிட்ட ஆவணங்களின் நகல் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு தகவல் கிடைக்காததால் 25.04.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 01.10.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் முன்னாள் படைவீரர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டது குறித்து தகவல் கேட்டுள்ளதாக தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் 31.03.09, 07.05.09 மற்றும் 05.06.09 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு ஒரு சில தகவல்கள் அனுப்பியதாக தெரிவித்தார். கொடுக்கப்பட்ட தகவல்களை பார்வையிட்ட போது மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் 1951 முதல் 1987 முடிய பேணப்பட்ட கோப்புகளிலிருந்து தகவல் கேட்டுள்ளதாக தெரிய வருகிறது. சம்பந்தப்பட்ட கோப்புகள் 25 ஆண்டுகளுக்கு முந்தையன என்றும், கோப்புகள் இல்லாத நிலையில் தகவல் தரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் ஆவணக் காப்பகத்தில் கோரப்பட்டுள்ளது கோப்புகள் பெறப்படின் அவ்விவரங்கள் மனுதாரருக்கு தெரிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆவணக் காப்பகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் மனுதாரர் கேட்டுள்ள வாலாய ஆணை (B.P.Rt) மற்றும் கோப்பு அவ்வலுவலகத்திற்கு மாற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் கூற்றுப்படி மனுதாரர் கேட்டுள்ள 1951–ம் ஆண்டு குறித்த கோப்பு வாலாய ஆணையாக ( B.P. Rt. ) வழங்கப்பட்டுள்ளதால் 7 ஆண்டு கோப்பாக முடிக்கப்படும் என்றும் மற்ற கோப்புகள் ஓ.மு.வாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் ஓராண்டு முடிவாக முடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் உள்ள கோப்புகள் பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் இல்லாத நிலையிலும், ஆவணக் காப்பகத்தில் இல்லை என்று தெரிவித்திருப்பதாலும் தகவல் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. மேல்முறையீட்டு அலுவலர் 20.07.09 அன்று சம்பந்தப்பட்ட திருவாரூர் மாவட்ட ஆட்சியருக்கு ஆவண விவரங்கள் ஏதுமிருப்பின் அதனை தெரிவிக்குமாறு கேட்டுள்ளார். திருவாரூர் மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆவணங்கள் பராமரிக்கப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மனுதாரர் கோரிய ஆவணங்கள் மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருப்பது குறித்து பொதுத் தகவல் அலுவலர் விசாரணையில் எதுவும் தெரிவிக்க இயலவில்லை. விசாரணை முடிவில் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1) மனுதாரர் கேட்டுள்ள ஆவணங்கள் மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருப்பது குறித்த விவரங்களை பெற்று , கோப்புகள் இருப்பின் தகவல்களை மனுதாரருக்கு இவ்வாணை

கிடைக்கப்பெற்ற 20 தினங்களுக்குள் வழங்கி அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2) மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அவ்வலுவலகத்தில் இல்லாதது குறித்தும், ஆவணக் காப்பகத்தில் சம்பந்தப்பட்ட கோப்புகள் அனுப்பப்பட்டிருப்பது குறித்தும் மன்னார்குடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் தகவல் இருப்பது குறித்தும், கோப்புகள் கிடைக்காத நிலையில் அது குறித்து உரிய ஆதாரங்களின் அடிப்படையில் பிரமாண வாக்குமூலத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு மாதத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவிப் பதிவாளர்

வழக்கு எண். 24466/09

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

திரு. கே. எஸ். ராஜா,
த/பெ. எஸ். சுப்பராவ்,
18/A, ஆர்.வி. நகர், மேற்கு 1–வது பிரிவு,
திருநாகேஸ்வரம் – 612 204,
குடந்தை வட்டம்,
தஞ்சை மாவட்டம்.